**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG20 – நிலை II (Grade II)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Written Examination)

**ஜூலை – ஆகஸ்டு 2020**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**1. எல்லா வினாக்களுக்கும் <u>ஒரு சொல் / தொடரில்</u> விடை தருக.**
***Answer all questions in a word / line.*** **(10x1 = 10)**

1. இராமலிங்க அடிகள் சிறப்புப் பெயர்கள் யாது?
2. எதை விட இனிமையானது தமிழ் மொழி?
3. கண்ணதாசன் நடத்திய இதழ்களின் பெயர்களில் ஏதேனும் ஒன்றைக் குறிப்பிடுக.
4. கண் உடையவர் யாவர்?
5. நாலடியார் யாரால் இயற்றப்பட்டது?
6. பழமொழிக்கு வேறு பெயர்கள் யாது?
7. தமிழுலகம் சுரதாவை எவ்வாறு அழைக்கின்றது?
8. பெரியாரின் இல்லத்தில் தங்கிய தேசத் தலைவர் யார்?
9. ஏட்டில் எழுதாக் கதைகள் எவை?
10. செய்யுள் வடிவில் தோன்றிய முதல் நாடக நூல் எது?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் <u>பத்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>மூன்று வரிகளில்</u> விடை தருக.**
***Answer any ten questions in three lines each.*** **(10x2=20)**

1. திருவருட்பா சிறு வரைக?
2. பெரியாரைப் பற்றி வ.ரா அவர்களின் கருத்து என்ன?
3. கண்ணதாசன் சிறு குறிப்பு வரைக.
4. கல்வி சிறப்பு கூறும் குறள் இரண்டினை விளக்குக.
5. மேன்மக்கள் சிறப்பு பற்றி நாலடியார் வழி விவரி?
6. ஞாயிற்றைக் கையால் மறைக்க இயலாது என்ற பழமொழியால் கூறப்படுவது யாது?
7. அன்பின் ஆழத்தையும் உயரத்தையும் எதனைக் கொண்டு குகன் உணர்த்தி விடுகின்றான்?
8. கருணாகரத் தொண்டைமான் பற்றி விவரி

9. திருக்குற்றால மலையின் சிறப்பை விளக்குக.
10. பெண்ணுக்கு அறிவை கொடுத்தவர் யார்? அந்த அறிவை கெடுத்தவர் யார்?
11. பாரதிதாசன் இயற்பெயர் மற்றும் பெற்றோர் பெயரைக் குறிப்பிடுக.
12. அமுதபாரதியின் புதுக்கவிதையை விளக்குக.
13. நாட்டுப்புறப்பாடல்கள் எவ்வாறு தோன்றின?
14. சைவர்கள் யாவர்?
15. நபிகள் நாயகம் நிலை நாட்டிய இறை கொள்கை யாது?

## பகுதி – இ

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**
***Answer any five questions in six sentences each.*** **(5x4=20)**

1. கண்ணதாசன் உலக வாழ்த்து பாடலின் கருத்தை விவரி?
2. கா. நமச்சிவாயர் கூறும் தமிழ் மொழியின் சிறப்பில் சிலவற்**றைக்** கூறுக.
3. குலோத்துங்க சோழன் யாருக்கு ஒப்பாக எவ்வாறு பாடப்பட்டுள்ளான்?
4. பாரதியார் பற்றி சிறு குறிப்பு வரைக.
5. எது இன்பம் என்று கவிஞர் சுரதா விளக்குகிறார்?
6. தாலாட்டு பாடல் கருத்தினை அப்பாடல் வழி விளக்குக.
7. குலசேகர ஆழ்வார் திருவேங்கட மலையின் சிறப்பினை எவ்வாறு பாடியுள்ளார்?
8. இயேசுவின் அன்பு நிலையினை விவரி?

## பகுதி – ஈ

**IV. ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**
***Answer any one of the following questions in fifteen sentences.*** **(1x10=10)**

1. பாரி வள்ளல் தன்மை பற்றி விவரி.
2. ஐவகை நிலம் மற்றும் திணை பற்றி எழுதுக.
3. நாட்டுக்கொடி சிறப்பினை விவரி

## பகுதி – உ

**V. ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**
***Write an essay in three pages to any one of the questions.*** **(1x15=15)**

1. கம்பராமாயணம் பற்றியும் கம்பர் பற்றியும் சிறு குறிப்பு தருக.
2. தொடர் வண்டி பற்றி ஒரு கட்டுரை வரைக.

*****